**05.10.2023**

**HMOP. No. 60/ 20 23 ம.சா. 1 மீனாட்சிசுந்தரம் என்ற நாச்சியப்பன், த/பெ. தியாகராஜன்**

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு**

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

எங்கள் திருமணமானது இருதரப்பு பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டு, எனது மற்றும் என் மனைவியின் முழு சம்மதத்துடன் நடந்தது என்றால் சரிதான். திருமணத்தின்போது சீர்வரிசையாக என் மனைவிக்கு எவ்வளவு நகை, பொருட்கள், சீதனப் பணம் கொடுத்தார்கள் என்ற முழு விபரம் எனக்கு தெரியும் என்றால் தெரியும். நகரத்தார் வழக்கப்படி ஏழைக் குடும்பமாக இருந்தாலும் பெண்ணிற்கு அவரது பெற்றோர் தரப்பில் வைரம் நகை போடுவது வழக்கம் என்றால் சரிதான். அதன்படி என் மனைவியின் பெற்றோர் வீட்டில் ஏழுக்கல் வைரத்தோடும், 1,20,000/- சீதனப்பணமும் கொடுக்கப்பட்ட விபரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். திருமணத்தின் போது நான் என் மனைவிக்கு 3 சவுரன் தாலி செயின் போட்டேன் என்றால் 5 சவுரன் போட்டேன். வைரத்தோடு, சீதனப்பணம், நான் போட்ட தாலிசெயின் என் மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னையும் சேர்த்து எங்கவீட்டில் நாங்கள் 6 பிள்ளைகள். 3 ஆண் பிள்ளைகள், 3 பெண்பிள்ளைகள், என் மூத்தசகோதரருக்கு திருமணம் ஆகி திருச்சியில் உள்ளார் என்றால் சரிதான். 50 வயதினை கடந்த என் தம்பிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். என் தங்கைகள் திருமணம் ஆகி உள்ளனர், மற்றோரு தங்கை திருமணம் ஆகி விவாகரத்து பெற்று என் அம்மாவுடன் உள்ளார் என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னர் நான் என் மனைவியுடன் பட்டமங்களத்தில் உள்ள வீட்டில் என் அம்மா, இரண்டு சகோதரிகள் , என் தம்பி ஆகியோருடன் கூட்டுக்குடும்பமாக இருந்தேன் என்றால் இல்லை. என் தாயார், என் மூத்த சகோதரி, அவரது குழந்தை, என் இளைய சகோதரி ஆகியோர் என் திருமண சமயத்தில் பட்டமங்களத்தில் அந்த வீட்டில் இருந்தனர் என்றால் இல்லை. எங்கள் திருமண சமயத்தில் மூத்த சகோதரி நாச்சம்மையின் கணவர் துபாயில் இருந்தார் என்றால் சரிதான். அதனால் தான் என் மூத்த சகோதரி அவரது இரண்டு குழந்தைகளுடன் என் திருமண சமயத்தில் பட்டமங்களத்தில் இருந்தார் என்றால் இல்லை. இல்லை என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. என் தாயாருக்கு வயது 84. எங்கள் வீட்டின் நிர்வாகம் அனைத்தையும் மூத்த சகோதரி பார்த்து வருகிறார் என்றால் இல்லை. திருமணமாகி என் மனைவியுடன் இந்தியாவில் இருந்ததாக சொல்லும் 55 நாட்களும் என் மனைவியுடன் சந்தோஷமாக இருந்தேன் என்றால் அவ்வளவாக இல்லை. நான் சந்தோஷமாக இல்லை, என் மனைவி என்னை மதிக்கவில்லை என காரணமானது என் மனுவில் நான் தெளிவாக சொல்லவில்லை என்றால் இல்லை.

என் முதல் குழந்தை எங்கள் திருமணத்தில் முதல் வருடத்திற்குள் பிறந்தார் என்றால் சரிதான். திருமணமாகி என் மனைவியுடன் சந்தோஷமாக இல்லறம் நடத்தியதால்தான் ஒருவருடத்திற்குள் எங்களுக்கு முதல் குழந்தை சாத்தியமானது என்றால் சரியல்ல. நான் துபாய் சென்றபிறகு பட்டமங்களத்தில் உள்ள வீட்டில் என் மனைவி, என் தாயார், என் சகோதரிகள், என் தம்பியுடன் இருந்தார் என்றால் சரிதான். என் மனைவி கர்ப்பம் தரிச்சவுடன் என் அம்மா சரியாக கவணிக்கமாட்டார் என்று என் மனைவியை அவரது அம்மாவீட்டிற்கு நான் தான் அனுப்பிவைத்தேன் என்றால் இல்லை, என் அம்மாவுடன் சண்டை போட்டுக்கொண்டு சென்றார். அவ்வாறு இருந்த காலக்கட்டத்தில் என் அம்மாவும், என் சகோதரிகளும், என் மனைவியுடன் சண்டைப்போட்டுக்கொண்டு, என்னிடம் தவறாக கூறியதை வைத்து நான் என் மனைவியை திட்டி வந்தேன் என்றால் இல்லை. என் மனைவி கர்ப்பமாக இருந்த போது அவரது மருத்துவ செலவிற்கு என் தாயாருக்கு பணம் அனுப்பி அதன் மூலம் செய்துவந்தேன் என்றால் என் அம்மா, எனக்கு தெரிந்தவர் மூலமும் பணம் அனுப்பியிருந்தேன். பிரசவச் செலவினை என் மனைவியின் குடும்பத்தினர் பார்த்தார்கள் என்றால் இல்லை, என் அம்மா கொண்டு போய் பணம் கொடுத்தார். பிரசவ செலவினை என் அம்மா பார்த்தார் என மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. முதல் குழந்தை பிறந்தவுடன் முறையாக சீர் செய்து என் குழந்தையை அழைத்து வந்தேன் என என் மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு என் தாயார் எந்த சீர்வரிசையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் முதல் குழந்தைக்கு என் மனைவியின் பெற்றோர் வீட்டில் 1 1/2 சவுரன் செயின், 1/2 சவுரன் தோடு, 1/4 சவுரன் மோதிரம் போட்ட விபரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கிற்காக எனக்கு தெரியாது என நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குழந்தை பிறந்த 30 வது நாள் குழந்தையுடன் என் மனைவியை எங்கள் வீட்டிற்கு அழைத்துவந்த பிறகு என் தாயாருடன் என் மனைவியால் இருக்கமுடியாது என கூறி என் பெற்றோர் வீட்டிற்கு அழைத்து சென்று விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. என் மனைவி என் குழந்தையுடன் அவரது தாயார் வீட்டிற்கு சென்றதை என் தாயார் எனக்கு கூறியதாகவும், நான் என் மனைவிக்கு அறிவுரை கூறியதாகவும் என் மனுவில் பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்தியாவிற்கு வரும் காலத்தில் திருவிழா காலங்களில் என் மனைவி குழந்தையுடன் பட்டமங்களத்திற்கு வருவார் என்றால் சரிதான். என் மனைவியையும், குழந்தையையும் துபாயிக்கு நான் அழைத்து செல்வதாக என் மனைவியிடம் கூறினேன் என்றால் சரிதான். தன்னை துபாயிக்கு அழைத்து செல்லவில்லை என்றால் மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக்கொள்வதாக தற்கொலைக்கு முயன்றதாக என்னிடம் யார் கூறிது என்றால் என் தாயார் கூறினார். எந்த தேதியில் இதுபோன்ற சம்பவம் நடந்தது என் மனுவில் நான் தெளிவாக கூறவில்லை என்றால் தேதி கூறவில்லை. இச்சம்பவத்திற்காக நானோ, என் தாயாரோ காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. சம்பவம் குறித்து தேதி குறிப்பிடாததாலும், காவல் நிலையத்தில்

புகார் கொடுக்காததாலும் இது போன்ற சம்பவம் நடக்கவில்லை என்பது தெளிவாகின்றது என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் உள்ள தொலைபேசி இணைப்பானது எங்கள் வீட்டில் உள்ள அனைத்து தொலைபேசியாலும் பேசும் வசதி இருந்தால் ஒத்த இணைப்பு உள்ளது என்றால் இல்லை. நானும், என் மனைவியும் பேசுவதை என் தாயார் தொலைபேசி மூலம் ஒட்டு கேட்டு அதற்கு ஏற்றார்போல் பிரச்சினை செய்து என் மனைவியை பற்றி என்னிடம் கூறுவார் என்றால் இல்லை. என் மனைவி பட்டமங்களத்திற்கு வரும்போதேல்லாம் அவர் மீது என் தாயாரும், என் சகோதரியும் பழி போட்டு அவரை அங்கிருந்து துரத்துவதில் குறியாக இருந்தார்கள் என்றால் இல்லை. என் மனுவில் எந்த தேதியில், எதற்காக என்மனைவி சண்டை போட்டார் என நான் தெளிவாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மனைவி எங்கள் வீட்டிற்கு வரும்போதெல்லாம் என் தாயாரும், சகோதரியும் அவரிடம் அதிகம் வேலை வாங்கி கொடுமைப்படுத்தினர் என்றால் இல்லை. என் மனைவியை நான் கவனித்தாலோ, பொருட்கள் வாங்கி கொடுத்தாலோ என் தாயாரும், சகோதரியும் சண்டை போடுவார்கள் என்றால் இல்லை. என் வருமானம் முழுவதையும் அவர்களே பெற்றக்கொள்ள வேண்டுமென்று என்னம் கொண்டதால்தான் எனக்கு துர்ஆலோசனை சொல்லி என் மனைவியிடமிருந்து பிரித்து வைத்துள்ளனர் என்றால் இல்லை. என் தாயார், என் சகோதரிகள் அனைவரும் என் வருமானத்தினை நம்பி உள்ளவர்கள் என்றால் இல்லை. செப்டம்பர் 2007 ல் 2 மாத விடுமுறையில் நான் இந்தியா வந்தேன் என்றால் சரிதான். அப்போது என் மனைவியுடன் சுமுகமாக, சந்தோஷமாக இருந்ததால்தான் விடுமுறை கழித்து என் மனைவி, குழந்தையை என்னுடன் துபாயிக்கு அழைத்து சென்றேன் என்றால் சந்தோஷமாக இருக்கவில்லை, குடும்ப அந்தஷ்த்து அந்த காலக்கட்டத்தில் கிடைத்ததால்தான் நான் அழைத்து சென்றேன். விவாகரத்து வேண்டும் என்பதற்காக நான் இவ்வாறு பொய்யாக கூறுகின்றேன் என்றால் இல்லை. என் மனைவியுடன் சுமுகமாகவும், சந்தோஷமாகவும் இருந்ததால் தான் 2008 ல் இரண்டாவது குழந்தை பிறந்ததது என்றால் இல்லை. என் மனைவி அடிப்படையில் நல்ல தையல் தொழில் தெரிந்தவர் என்றால் இல்லை. என் மனைவிக்கு விதவிதமாக சமைக்க தெரியும் என்றால் இல்லை. அதனால் தான் என் மனைவி யூடியூப் சேனல் நடத்தினார் என்றால் முன்பு சமையல் தெரியாது, கற்றுக்கொண்டு நடத்தினார். யூடியூப் சேனல் வழியாக என் மனைவிக்கு நல்ல வருமானம் வருவதை நான் ஊக்குவித்தேன் என்றால் இல்லை. என் மனைவி துபாயில் இருந்த காலத்தில் அக்கம்பக்கத்தில் உள்ள குழந்தைகளை பாதுகாப்பதற்காக குழந்தை பாதுகாப்பு மையத்தினை என் மனைவி வீட்டில் நடத்தினார் என்றால் இல்லை. இதன் மூலம் என் மனைவி நிறைய குழந்தைகளை பராமரித்து ஒரு குழந்தைக்கு மாதம் ரூ. 20000/- வீதம் நிறைய சம்பாதித்து எனக்கு கொடுத்தார் என்றால் இல்லை. என் மனைவி தையல் தைத்தும் வருமானம் ஈட்டினார் என்றால் இல்லை. திருமணத்தின்போதோ, நான் துபாயில் இருந்த காலக்கட்டத்திலோ நான் வேறு எந்த நகைகளோ நான் என் மனைவிக்கு துபாயில் இருந்து வாங்கிக்கொடுத்தேனா என்றால் இல்லை. 2007 ல் என் மனைவியை

அழைத்துக்கொண்டு சென்றபிறகு தான் நான் சொல்லியுள்ள 50 சவுரன் நகைகள் வாங்கப்பட்டது என்றால் சரிதான். திருமணத்தின்போது எனக்கும், எனது மனைவிக்கும் அவர் பெற்றோர் வீட்டில் போட்ட 16 சவுரன் நகையில் 1 1/2 சவுரன் வளையலை மட்டும் 3 பவுன் வளையலாக மாற்றிக்கொடுத்தேன் என்றால் இல்லை, 16 பவுனையும் மாற்றிக்கொடுத்தேன். வழக்கிற்காக இவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 50 சவுரன் வாங்கியதாக சொல்லும் நகைகளின் சிலவற்றை கடன் அட்டைமூலமாகவும், சிலவற்றை ரொக்கம் மூலமாகவும் வாங்கினேன் என்றால் சரிதான். என் மனைவி ஈட்டிய வருமானத்தினை என்னிடம் கொடுத்து அதன் மூலம் நகைகளை நான் மேற்கண்டவாறு வாங்கினேன் என்றால் இல்லை. வழக்கிற்காக அனைத்து நகைகளையும் நான் வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. துபாயில் இருந்த காலக்கட்டத்தில் என் மனைவி எனக்கு சரியாக உணவு கொடுக்காமலும், குழந்தையை பராமரிக்கமாலும் இருந்ததாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. துபாயில் என் மனைவி இருந்த போது வீட்டிற்கு பராமரிப்பதற்காக என் மனைவிற்கு மாதம் 1000 திராம் கொடுப்பேன் என்றால் 1500 திராம் வரை கொடுப்பேன். இதைவைத்து தான் என் மனைவி குடும்பத்தை பராமரித்தார் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை என் இரண்டு குழந்தைகள் என் மனைவியின் பராமரிப்பில் உள்ளனர் என்றால் சரிதான். அவ்வாறு என் மனைவி முறையாகவும், சரியாகவும் பராமரித்ததால்தான் என் மூத்த மகள் பள்ளியல் முதல் மாணவியாக வந்தார் என்றால் எவ்வாறு பராமரித்தார் என்று எனக்கு தெரியாது. என் குழந்தைகள் இருவரும் தங்கள் தாயார் தங்களை முறையாக பராமரிக்கவில்லை என என்னிடம் கூறியுள்ளனரா என இல்லை. என் மனைவியின் தகப்பனார் 2008ல் இறந்ததால் என் மனைவி, குழந்தைகளை துபாயில் இருந்து அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை நான் என் மனைவி ,குழந்தைகளுக்கு தேவையான பொருளாதார உதவியினை செய்து வருகிறேன் என்றால் சரிதான். அன்றாடம் என் மனைவி, குழந்தைகள் நான் அழைபேசி மூலமாக பேசி அவர்களுக்கு அன்றாட வாழ்க்கை முறையினையும், தேவைகளையும் விசாரித்து பூர்த்தி செய்து வருகிறேன் என்றால் குழந்தைகளிடம் மட்டும் பேசி வருகிறேன். 2008 முதல் 2010 வரை என் மனைவி, குழந்தைகள் இந்தியாவில் இருந்தார்கள் என்றால் 2010 மார்ச் வரை இருந்தார்கள். அப்போது என் தாயார் காரைக்குடியில் வீடு பிடித்து என் மனைவி குழந்தைகளை அங்கு குடி வைத்து, என் முதல் மகளை அவரே பள்ளியில் சேர்த்துவிட்டார் என்றால் சரிதான். இதனால் என் மனைவி, பிள்ளைகளுக்கு நான் அதிகமாக செலவு செய்வதாக என் தாயார் என் மீது அதிகமாக கோபம் கொண்டு என்னுடனான பேச்சுவார்த்தையை நிறுத்தி இருந்தார் என்றால் இல்லை. காரைக்குடியில் வீடு பிடிப்பதற்கும் , குழந்தையை பள்ளியில் சேர்ப்பதற்கும் என் தாயாருக்கு ரூ.2,00,000/- பணம் போட்டுள்ளேன் என்றால் இல்லை. எவ்வளவு பணம் போட்டுள்ளேன் என்றால் ரூ.1,25,000/- போட்டுவிட்டேன். அந்த பணத்திற்கு என் மனைவி, பிள்ளைகளுக்கு எந்த பொருள்களும் வாங்கி கொடுக்காமலும் என்

தாயாரே வைத்துக்கொண்டார் என்றால் இல்லை, என் மனைவி குழந்தைகளுக்கு கொஞ்சம் செலவு செய்து விட்டு என் தாயாரும் செலவு செய்து கொண்டார். இதனால் நான் மனம் வேதனைப்பட்டு என் மனைவிக்கு பணம் அனுப்பி பொருட்கள் வாங்கியதன் மூலம் நான் நல்ல முறையில் பார்த்து வந்தேன் என்றால் இல்லை. 2010 ஏப்ரலில் என் மனைவி, பிள்ளைகளை நான் துபாயிக்கு அழைத்துச் சென்றேன் என்றால் சரிதான். துபாயில் என் இரண்டு பிள்ளைகளை நான் பள்ளியில் சேர்த்து விட்டு படிக்கவைத்தேன் என்றால் சரிதான். அப்போது என் மனைவியுடன் சண்டை ஏற்படுவதற்கான காரணத்தினை கொண்டு என் தாயார் என்னை தூண்டிவிட்டார் என்றால் இல்லை. என் மனைவியின் தந்தைக்கு சொந்தமான பூர்வீக சொத்தினை விற்பனை செய்ய முயன்றபோது ரூ. 85,000/- பணம் கொடுத்து என் மனைவியின் பெயரில் வாங்கியதாக என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். சுமுகமான, சந்தோஷமான உறவில் இல்லாத மனைவிக்கு 50 சவுரன் நகையும், சொத்தும் வாங்கி இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. என் பெயரில் வாங்கிய சொத்துக்களின் ஆவணங்களையும், என் மனைவி பெயரில் வாங்கிய சொத்துக்களின் ஆவணங்களையும் என் மனைவியின் பெற்றோர் வீட்டில் வைத்துக்கொள்ளும்படி நான் சொல்லி அங்கு வைக்கப்பட்டது என்றால் இல்லை. 2017ல் நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆவணங்கள், மற்றும் நகைகளுடன் அந்த பிரோவை பட்டமங்களத்தில் கொண்டு வைத்துவிட்டார்கள் என்றால் நான் கேட்டு வைக்கவில்லை, பஞ்சயாத்து வைத்துதான் வந்தது. பஞ்சாயத்து வைத்துதான் வந்தது என்று என் மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். எந்த தேதியில் யார்யாரை வைத்து பஞ்சாயத்து செய்யப்பட்டது என்று என் மனுவில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். என் மனைவி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்ள முயன்றதாக நான் கூறியுள்ளதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் இல்லை. மீண்டும் துபாயிக்கு சென்ற நான் வீட்டிற்கு வராமல் அலுவலகத்திலேயே தங்கிக்கொண்டதால் என் மனைவி பயந்துகொண்டு அலுவலகத்திற்கு தேடி வந்தார் என்றால் இல்லை, அலுவலகத்தில் தங்க முடியாது. 2019ல் நான் பட்டமங்களத்திற்கு வந்தபோது என் மனைவியை அடித்து துரத்தவே, அவர் என்னுடன் தான் சேர்ந்து வாழுவேன் என கூறியவரை அடித்து, கழுத்தை நெறித்து கொடுமைப்படுத்தினேன் என்றால் இல்லை. 2020ல் எனது இரண்டாவது மகள் பெரிய பெண்ணாக ஆகிய போது கொரனா காலக்கட்டம் என்றால் சரிதான். கொரனா காலக்கட்டத்தில் அதிக கூட்டம் துபாயில் கூடக்கூடாது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் இங்கு இருந்தது போல் அங்கு பகலில் கட்டுப்பாடு இல்லை. பெரிய அளவில் விழா எடுக்கவேண்டுமென்று என் மனைவி வற்புறுத்தியதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இரண்டு முறை என் மனைவி இந்திய தூதரகத்தில் எதற்காக புகார் கொடுத்தார் என்று என் மனுவில் தெளிவாக தெரிவிக்கவில்லை என்றால் சொல்லியுள்ளேன். என் அம்மா, சகோதரியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு என் மனைவி, குழந்தைகளுக்கு உணவு கூட கொடுக்காததால்தான்

என் மனைவி தூதரகத்தில் புகார் கொடுத்தார் என்றால் அது பொய், உணவு கொடுக்காமல் இருக்க முடியாது. 2020 ஜனவரியில் நான் இந்தியா வந்ததற்கு எவ்வித காரணத்தையும் என் மனைவி, குழந்தைகளிடம் சொல்லவில்லை என்றால் காரணம் சொல்லவில்லை, ஆனால் இந்தியாவிற்கு செல்வதாக சொன்னேன். பட்டமங்களத்தில் உள்ள பூர்வீக வீட்டினை கட்டுமான செய்வதற்காகத்தான் இந்தியா வந்தததால்தான் அந்த காரணத்தை என் மனைவி, குழந்தைகளிடம் சொல்லவில்லை என்றால் அந்த வீடு என் தம்பி கட்டியது. 2021 ஏப்ரலில் விசா முடிந்து என் மனைவி, குழந்தைகள் இந்தியா வந்தவுடன் அவர்களுக்கு வீடு பார்த்து வைத்து இன்று வரை நான்தான் பராமரித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எப்போது எல்லாம் இந்தியா வருகின்றேனோ அப்போது எல்லாம் என் மனைவி, குழந்தைகளை வெளியில் அழைத்து செல்கிறேன் என்றால் இல்லை. இந்த வருடம் ஏப்ரல் மாதம் நான் இந்தியா வந்தபோது கானாடுகாத்தான் அரண்மணையை பார்க்க என் மனைவி, குழந்தைகளை நான் அழைத்து சென்றேன் என்றால் சரிதான். ஏப்ரல் 2021 ல் என் மனைவி, குழந்தைகள் இந்தியா வந்தவுடன் ஜீன், ஜீலை, ஆகஸ்ட் என மூன்று மாதங்கள் என் மனைவி, குழந்தைகளை நான் கவனிக்காததால் என் மனைவி திருப்பத்துார் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 12.08.2021 ல் புகார் கொடுத்தார் என்றால் புகார் கொடுத்தார். அந்த புகாரின் படி காவல் துறை விசாரணை செய்த போது என் சகோதரி வீட்டின் நிர்வாகத்தை அவரே பார்த்துக்கொள்ள வேண்டுமென எச்சரிக்கப்பட்டார் என்றால் இல்லை. இதுவரை என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ முயற்சி எடுத்து வருகிறார் என்றால் இல்லை. என் மனைவிக்கு நான் வாங்கி கொடுத்ததாக சொல்லும் நகைகளும், ஆவணங்களும் பட்டமங்களத்தில் உள்ள வீட்டில் என் வசம் உள்ளது, அதன் சாவி என்னிடம் தான் உள்ளது என்றால் ஒரு சாவி என் மனைவியிடம் உள்ளது, அதில் என்ன உள்ளது என்று நான் திறந்து பார்த்தது இல்லை. சாவி என்னிடம் மட்டும் தான் உள்ளது, என் மனையிடம் ஒரு சாவி உள்ளதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் என் மனைவிக்கு தனிப்பட்ட முறையிலும் எவ்வித பிரச்சினையும் இல்லை, என் அம்மா, சகோதரியின் துாண்டுதளின் பேரில் மனுவினை தாக்கல் செய்தேன் என்றால் இல்லை. இவ்வழக்கில் என் மனைவி தாம்பத்திய வாழ்வு உரிமையை மீட்டளிக்க கோரி எதிர்கோரிக்கை கேட்டுள்ளார் என்றால் சரிதான். என் மனுவில் முகாந்திரம் இல்லாததால் நான் கோரியுள்ள விவாகரத்து பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆவணங்கள், நகை, பணம் முழுவதும் எனது பொருப்பில் ஒப்படைக்கவேண்டுமென்று மிரட்டிதான் இவ்வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

04.10.2023.

**HMOP. No.    / 20 23      ம.சா. 1      த/பெ.**

சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

**வேண்டுகொளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**